**செய்தி வெளியீட்டு எண் : 101/2021** **நாள் : 24.04.2021**

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று 24.04.2021 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 20021 வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு காஞ்சிபுரம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் பேரில் காஞ்சிபுரம் மாவட்டடத்தில் உள்ள 28. ஆலந்தூர், 29, ஸ்ரீபெரும்புதூர், 36. உத்திரமேரூர் மற்றும் 37. காஞ்சிபுரம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான சட்டமன்ற பொதுத் தேர்தல் 20021 (06.04.2021 அன்று நடைபெற்றது) இத்தேர்தலில் பதிவான வாக்குகளை காரைபேட்டை பகுதியில் அமைந்துள்ள அண்ணா பல்கலைகழக பொறியியல் கல்லூரியில் வருகின்ற 02.05.2021 அன்று எண்ணப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்பில் 4 சட்டமன்ற தொகுதிக்களுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர், 134 வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர்கள், 134 வாக்கு எண்ணும் உதவியாளர்கள் மற்றும் 1.34 நுண்பார்வையாளர்களுக்கு கொரனா கட்டுபாட்டு வழிமுறைகளை பின்பற்றி பயிற்சி கூட்டம் நடைபெற்றது.

வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு 02.05.2021 அன்று எந்த மேஜையில் பணியாற்ற வேண்டும் என்பது குறித்து காலை 5.00 மணியளவில் கணினி குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படும். அதன்பின் எந்த மேஜையில் எந்த வாக்கு பதிவு இயந்திரங்கள் எண்ணப்பட வேண்டும் என்பது குறித்தும் கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும். ஆகையால் வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்கள் காலை 6.00 மணிக்குள்ளாக தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சட்டமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை சுடத்திற்கு வருகை தர வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் மேஜையில் ஒரு மேற்பார்வையாளர், ஒரு உதவியாளர் மற்றும் ஒரு நுண்பார்வையாளரும் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கபட்டுள்ள பாதுகாப்பு அறை, வாக்கு எண்ணும் நாளன்று காலை வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு அங்கிருந்து வாக்கு எண்ணப்படும் மேஜைக்கு கொண்டுவரப்படுவது உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளும் வீடியோ மூலம் பதிவு செய்யப்படும். வாக்கு எண்ணும் அலுவலர்கள் வாக்கு எண்ணிக்கை ஆரம்பம் முதல் இறுதி வரை தமக்கு ஒதுக்கப்பட்ட மேஜையை தவிர்த்து வேறு எங்கும் செல்லக்கூடாது. மேஜையின் மீது ஒவ்வொரு சுற்று வாரியாக வழங்கப்படவுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான வாக்குச்சாவடி எண் மற்றும் விவரங்கள அடங்கிய விவரங்கள் வழங்கப்படும். வாக்கு எண்ணிக்கையின்போது தங்களுக்கு வழங்கப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டது தானா என உறுதி செய்யப்பட வேண்டும். வாக்குப்பதிவு இயந்திரத்திலுள்ள பச்சை நிற அட்டையில் உள்ள எண்ணை 17ஊ விண்ணப்பத்துடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட வேண்டும்.

வாக்கு எண்ணிக்கைக்கான பட்டனை அழுத்தியவுடன் முகவர்கள் காணும் வகையில் கட்டுப்பாட்டு கருவியினை வைத்துக் கொள்ள வேண்டும். கட்டுப்பாட்டு கருவியில் வரும் முடிவுகளை இரண்டு பிரதிகள் தயாரித்து அதில் முகவர்களிடம் கையொப்பம் பெற வேண்டும். வாக்கு எண்ணிக்கை குறிக்கப்பட்ட இரு பிரதிகளையும் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கிட வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர் அதன் பிரதியை எடுத்து வேட்பாளரின் முகவர்களுக்கு வழங்கிட வேண்டும். வாக்கு எண்ணிக்கையின்போது ஏதேனும் ஐயம் எழும்பட்சத்தில் அதனை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உடனடியாக தெரிவித்திட வேண்டும். வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இப்பயிற்சி வகுப்பில் காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.பன்னீர்செல்வம், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் தேசிய நெடுஞ்சாலை), காஞ்சிபுரம் திரு.எம்.நாராயணன், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், சிப்காட் திரு.ஏ.ராஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,காஞ்சிபுரம்.**